**செய்தி வெளியீடு எண்: 1162** **நாள் : 31.12.2010**

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

22 வது சாலைப் பாதுகாப்பு வாரவிழா இப்புத்தாண்டு சனவரி திங்கள் முதல் வாரத்தில் கடைப்பிடிக்கப்படுவதையொட்டி சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்படுத்தும் நோக்கத்தோடு, சாலைப் பாதுகாப்பு வாசகம் அடங்கிய ராட்சத பலூான் 02.01.2011 மாலை 6.00 மணியளவில் மெரினா கடற்கரை காந்தி சாலை அருகில் போக்குவரத்து ஆணையர் மற்றும் கூடுதல் காவல்துறை ஆணையர் (போக்குவரத்து) அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு தமிழக போக்குவரத்து அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் பறக்க விட இசைந்துள்ளார்கள். பொதுமக்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தொடர்ந்து ஏழு நாட்கள் இந்த ராட்சத பலூான் வானில் பறக்கும். ஒரு நாடு வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்வதற்கு சாலை மேம்பாடு மிக அவசியம். சாலை விபத்துக்களின்றி சாலைப் பயணங்கள் இனிதாக அமைந்திட மக்களிடம் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு அவசியம். இது போன்று சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களில் பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து ஆணையர்
சென்னை-5

**வெளியீடு:—**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ—9.**